செ.வெ.எண்: 614 நாள்: 04.10.2024

# புதுக்கோட்டை மாவட்டத்தில்

## பேரடர் காலங்களில், 04322 222207 மற்றும் 1077 என்ற கட்டணமில்லா எண்களை பொதுமக்கள் தொடர்பு கொள்ளலாம் -

## மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

---

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு, புதுக்கோட்டை மாவட்டத்தில், நீர்வளத்துறையின் சார்பில், நீர் வரத்துவாரி வாய்க்கால்கள் தூர்வாரப்பட்டுள்ள பணிகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் இன்று (04.10.2024) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

**பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது;**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை தொடங்கப்படவுள்ளதை முன்னிட்டு, பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். அந்த வகையில், மழைநீர் வழிந்தோடும் வரத்து வாய்க்கால்கள் தூர்வாருதல், சீரற்ற சாலைகளை சரி செய்தல், பாதுகாப்பு உபகரணங்களை தயார் நிலையில் வைத்தல் உள்ளிட்ட பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி இன்றைய தினம் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள பல்வேறு நீர் வரத்துவாரி வாய்க்கால்கள் தூர்வாரப்பட்டுள்ள பணிகள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

அதன்படி, புதுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம், கவிநாடு ஊராட்சி, செல்லுக்குடி கிராமத்தில் உள்ள கவிநாடு கண்மாய் நீர் வரத்துவாரி வாய்க்கால், பூசத்துறை கிராமத்தில் உள்ள தெற்கு வெள்ளாறு நீர் வரத்துவாரி வாய்க்கால், அரிமளம் ஊராட்சி ஒன்றியம், தாஞ்சி நீர் வரத்துவாரி கண்மாய், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், இசுகு கண்மாய் மற்றும் இசுகுப்பட்டி கிராமம், ஓடக்குளம் கண்மாய் நீர் வரத்துவாரி ஆகிய இடங்களில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு தூர்வாரப்பட்டுள்ள பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது.

மேலும், தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழையானது அக்டோபர் முதல் டிசம்பர் மாதம் வரை பெய்யக்கூடியது. பேரடர் காலங்களில், மாவட்ட ஆட்சியரகத்தில் 24 மணிநேரமும் செயல்பட்டுவரும் கட்டுப்பாட்டு அறையின் 04322 222207 மற்றும் 1077 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்களை பொதுமக்கள் தொடர்பு கொண்டு தகவல் தெரிவிக்கலாம்.

எனவே பொதுமக்கள் அனைவரும் வடகிழக்கு பருவ மழையின்போது, தமிழக அரசின் மூலம் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளை உரிய முறையில் பின்பற்றி ஒத்துழைப்பு நல்க வேண்டும் எனவும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.மு.அருணா, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இந்த ஆய்வுகளின் போது, உதவி செயற்பொறியாளர் (நீர்வளத்துறை) திரு.சண்முகவேல், உதவிப் பொறியாளர் திரு.முகமது உசேன், பாசன உதவியாளர்கள் திருமதி.பெரியநாயகி, திரு.மோகன் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.

------------------------------------------------------------------------------------------------------------

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**


புதுக்கோட்டை மாவட்ட செய்திகளை உடனுக்குடன் தெரிந்துக்கொள்ள:

Pro Pudukkottai PRO PDKT @PRO_Pudukkottai Pro.Pudukkottai